# தமிழ்நாடு சட்டப் பேரவை

**சனிக் கிழமை, 1969 மார்ச் 8**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்ட பத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 226 முதல் 232 வரையில் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### கால்நடை மருத்துவ மனை

* 233 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைதுறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம், சூணம்பேடு ஆகிய இரண்டு இடங்களிலும் கால்நடை மருத்துவ மனைக்காகக் கட்டப்பட்டு முடிவுற்ற கட்டடங்களில் ஆறுமாதமாகியும் குடியேருமல் வாடகை கட்டடங்களில் இன்னும் மருத் துவ மனை இயங்கி வருவதன் காரணம் என்ன ?

(இ) புதிய கட்டடங்கள் முடிக்கப்பட்ட பிறகும் மதுராந்தகம், சூணம் பேடு ஆகிய ஊர்களில் இயங்கி வரும் வாடகைக் கட்டடங்களுக்கு எவ்வளவு வாடகை தரப்பட்டிருக்கிறது ”

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** (அ) மதுராந்தகத்திலும் சூணம்பேட்டையிலும் கால்நடை மருந்தகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடங் களில் அந்த மருந்தகம் உடனடியாக செயல்பட இயலவில்லை. ஏனென்ருல், மின்சார வழங்கல், நீர் வழங்கல் போன்ற முக்கிய வசதிகள் அங்கு செய்து கொடுக்கப்படவில்லை. மேலும், மாட்டடைப்பு (trevis) கட்டுதல், 'வேலி போடுதல் முதலிய வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட பிறகு, மதுராந்தகத்தில் உள்ள கட்டிடத்தில் 21—12—1967 அன்றும், சூணம்பேட்டையில் உள்ள கட்டிடத்தில் 5—4—1968 அன்றும் கால்நடை மருந்தகம் செயல்படத் தொடங்கியது.

(இ) மதுராந்தகத்திலுள்ள கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 120 வாடகை செலுத்தப்பட்டது. முக்கிய கட்டிடம் கட்டி முடிந்த தேதி முதல் மொத்தம் ரூ. 1,040 வாடகை செலுத்தப் பட்டது. சூணம்பேட்டையில் உள்ள கால்நடை மருந்தகத்தைப் பொறுத்த வரையில், சூணம்பேட்டையில் வாடகைக் கட்டிடத்தில் மையக் கிராம வளர்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக் கட்டிடத்துக்கெனத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 வாடகை செலுத்தப்படுகிறது. சூணம் பேட்டையிலுள்ள கால்நடை மருந்தகம் அதே கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, கால்நடை மருந்தகத்திற்காக வாடகை எதுவும் தனியே கொடுக்கப்படவில்லை.

### *Fixation of Procurement prices.*

* 234 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the attention of the Government has been drawn to the views of the Deputy Chairman of the Planning Commission on the subject of fixation of procurement prices?